DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 05/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 22nd day of July 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 6** | கிராமம் | : | |
| பெயர் | : | காளியம்மாள் | தாலுகா | : | |
| க/பெ. | : | பாஸ்கரன் | சமயம் | : | |
| வயது | : | | ஜாதி | : | |
| தொழில் | : | | | | |

<u>நாள்: 22.07.2025</u>
<u>நேரம்: 11.55</u>

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதன்மை விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1யை தெரியும். எதிரிகளை தெரியும். எங்கள் ஊர் அம்மன் கோவிலில் சாதியை தெரிவிக்கும் விதமாக ஒரு குறிப்பிட்ட நிறத்தில் பெயிண்ட் அடித்ததால் அ.சா.1க்கும், எதிரிகளுக்கும் இடையே 2 வருடகாலமாக பிரச்சனை இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 2022ம் வருடம் ஒருநாள் காலை 7.00 மணியளவில் 1, 2 எதிரிகள் எங்கள் ஊரில் உள்ள கண்மாய்க்கு குளிப்பதற்காக வந்தார்கள்.

அப்போது அ.சா.1ன் வீட்டருகே எதிரிகள் வந்தபோது, வீட்டின் வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்த அ.சா.1யை பார்த்து 2ம் எதிரி நீதான் அங்கு பெயிண்ட் அடித்ததாக என்று கேட்டார். அதற்கு அ.சா.1 எதுவும் சொல்லாமல் அமைதியாக இருந்தார். உடனே 2ம் எதிரி அவர்கள் கொண்டு வந்த இருசக்கர வாகனத்தில் இருந்து இறங்கி, அவரது கையால் அ.சா.1ன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். நான் அப்போது அருகில் நின்று கொண்டு இருந்தேன். ஊரில்

உள்ள சில நபர்களும் அங்கு நின்று கொண்டு எதிரிகளை இவ்வாறு செய்யாதீர்கள் என்று கூறினார்கள். இது தொடர்பாக அ.சா.1 புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

/Sd/ G.தங்க கார்த்திகா,
நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
இராமநாதபுரம்.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 05/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 22nd day of July 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 7** | கிராமம் | : | |
| பெயர் | : | செல்வராஜ் | தாலுகா | : | |
| க/பெ. | : | கோபால் | சமயம் | : | |
| வயது | : | | ஜாதி | : | |
| தொழில் | : | | | | |

நாள்: 22.07.2025
நேரம்: 12.00

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதன்மை விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 11.10.2022ம் தேதி பகல் 11.00 மணியளவில் நானும், திருமுருகன் என்பவரும் எங்கள் ஊரில் உள்ள கண்மாய்க்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது உத்திரகோசமங்கை போலிசார் வந்து, அ.சா.1ன் வீட்டின் முன்பாக பார்வையிட்டு வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அப்போது போலிசார் என்னிடமும், திருமுருகன் என்பவரிடமும் சாட்சியாக இருக்குமாறு கேட்டு கொண்டதின் பேரில் நாங்கள் இருவரும் போலிசார் தயாரித்த பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்து கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

/Sd/ G.தங்க கார்த்திகா,
நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
இராமநாதபுரம்.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No. 05/2023**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 22nd day of July 2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 8** | கிராமம் | : | |
| பெயர் | : | திருமுருகன் | தாலுகா | : | |
| க/பெ. | : | ஆறுமுகம் | சமயம் | : | |
| வயது | : | | ஜாதி | : | |
| தொழில் | : | | | | |

நாள்: 22.07.2025
நேரம்: 12.05

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதன்மை விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 11.10.2022ம் தேதி பகல் 10.00 மணியளவில் நானும், செல்வராஜ் என்பவரும் எங்கள் ஊரில் உள்ள கண்மாய்க்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது உத்திரகோசமங்கை போலிசார் வந்து, அ.சா.1ன் வீட்டின் முன்பாக பார்வையிட்டு வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அப்போது போலிசார் என்னிடமும், செல்வராஜ் என்பவரிடமும் சாட்சியாக இருக்குமாறு கேட்டு கொண்டதின் பேரில் நாங்கள் இருவரும் போலிசார் தயாரித்த பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்து கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

/Sd/ G.தங்க கார்த்திகா,
நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
இராமநாதபுரம்.